ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7 ஜுலை, 1944 நெ. 4

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயணு.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்னு, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—

*மாகாண சாலை போடும் திட்டம்* ... 121


*துங்கபத்ரா திட்டம்* ... 123

*மைசூரும், சில்லரை தொழில்களும்* ... 123

2. இந்தியாவின் பசியுடனிருக்கும் கால் நடைகள் ... 124

3. வீட்டு ஈயும் அதை போக்க வழியும் ... 125

4. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 127




கிராம பஞ்சாயத்து போர்டின்
கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VII] JULY, 1944 [No. 4

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## Provincial Road Planning.

The Government of Madras have certain schemes for road development as part of their post-war reconstruction programme. They propose to lay 18,000 miles of new roads. This will be done at an estimated cost of ten crores of rupees. Five crores will be spent on bridges and five crores for actual road-making. At present 36,000 miles of road exist. For bettering these roads the Government propose to spend 25 crores. All this is spread over a period of twenty years. The local Governments' programme is part of the All-India programme. Therefore, the Central Government appear to lay down broad policies. It appears they stipulate that no village with a population of 1,000 and above in a highly agricultural area should be further away than two miles from an all-weather road. No village of the same type in a non-agricultural area should be further away than six miles from an all-weather road.

We are concerned, as we have so often pointed out, with the village and the village ryot's convenience. Except where the area is covered by forests the whole of the land in our country is practically agricultural land. It is really the poorer agriculturist who is in a majority that suffers most; because, he has not the means to invest on high class carts or strong bulls or rubber tyres. If he has to grow out of his poverty the Government should give him all facilities on a par with his richer brother. Therefore, it appears to us to be inviduous to make a distinction between highly agricultural and less agricultural areas. The less agricultural areas have to grow into highly agricultural areas or, better, still into areas producing other goods of value. In either case, they require full facilities of communication.

The criterion of two miles distance from an all-weather road or six miles thereof does not seem to possess any point. Every village

say of a 1,000 population or more, must be connected to the high ways by an all-weather road.

A road is required to serve the ryot in bad weather. In fair weather, the ryot in this country car always negotiate any ordinary track easily. Roads for pleasure rides are very much further away from the thoughts of the ryot. His main necessity is a road from where he lives to the outside world that will help him to transport himself and his produce to that wider world. Experience has shown that in times of epidemics during rains village after village in certain tracts is left uncared for, because no comfortable conveyance can take medical help to it.

We therefore feel that the true policy for road laying in this country should be to help every village to construct its own pucca road to the nearest high way. There are about 15,000 villages in our province. Five crores distributed over them would give an average of about Rs. 3,300 which is not overmuch. With the help of local labour properly organised this may be augmented to Rs. 6,000. It is only village panchayats that can best carry out this programme. The Mysore State with its panchayats and their roads is an example. For this one purpose of roads panchayats may be formed universally and they be required by a proper plan and Government help to connect their village or villages with the outside world.

Under Indian conditions, it is always tragic that schemes emanate from centralised authority and the village is the last to be given the power or option to mould its own destiny. It is no use entrusting even district boards with the power to make roads for villages.

We are glad that 25 crores of rupees is allotted for the improvement of existing roads. The central and local Governments and district boards may very well take charge of this work and the 10 crores intended for new roads may well be earmarked for expenditure by panchayats preferably through joint committees organising local labour resources. Of course, guidance, control, and supervision of higher authorities is always there.

## The Tungabhadra Project.

A final agreement has been reached with Mysore and Hyderabad regarding the utilisation of the waters of the Tungabhadra. The Madras Government have decided to take up the construction of a dam and reservoir at Mallapuram in conjunction with the Government of Hyderabad as soon as possible.

The scheme is estimated to cost, at the present rates, about rupees ten crores and is expected to be completed in about eight years. Water for irrigation may, however, become available at the end of six years. The area to be irrigated in Bellary and Kurnool districts under the present scheme is about four lakhs of acres. With the exception of about ten per cent of the area, where rice will be grown, irrigation will be for growing dry crops, such as millets, cotton and groundnut besides garden crops.

Both the Madras and Hyderabad Governments will develop hydro-electric power at the site of the dam. The power generated

by Madras will be available for industrial development in the neighbouring areas of the Ceded districts.

The cost of the dam and reservoir will be shared equally by the Madras and Hyderabad Governments. The construction will be undertaken jointly by the Public Works Departments of both the Governments.

With this news broadcast we have certainly reached a stage which was never reached before during the last forty-two years that the scheme has been talked of. We may well congratulate Sri S. V. Ramamoorti, I.C.S., for the progress he has achieved in this matter. The newspapers have further published certain expectations. It is expected, we are told, that the construction work will begin next year. In the meantime, the necessary staff will be appointed for carrying out preliminary work. These expectations, if realised would be very welcome. But, on behalf of the Government, it has often been stated that the scheme will have to wait till after the war. If at all anything may be done previous to that, it will be digging of earth if famine conditions should arise. We only desire that the Government does not wait either for the famine or for the end of the war. All that can be done immediately should be taken up without delay. That is the only way of assuring people who have waited for the scheme starving for it for over four decades.

---

## Mysore and Minor Industries.

Mysore forges ahead in all directions.

A novel scheme for the solution of unemployment among educated classes has been sanctioned by the Government of Mysore who have framed rules empowering the Director of Industries and Commerce to grant loans for this purpose.

Under the scheme, the Director is authorised to grant loans to deserving persons who are Mysoreans by birth or domicile for the purchase of technical equipment including cost of erection. Loans will also be advanced to meet losses in the early stages of production and even working capital in special cases. Grants will not exceed Rs. 1,000 and would in no case go beyond Rs. 2,000. Half the amount advanced will be treated as subsidy, the balance being loan, interest free, repayable in equal monthly instalments spread over a period not exceeding five years.

We wish the Government of Madras seriously considered a scheme like this for our province, more especially for the Rayalaseema and the like areas where there is ever-recurring famine. People over there have been told by responsible officers that capital should be found by the people if they desire development of the area, and that what the Economic Development Board can assist in is to give technical information and advice. It is not possible to induce the capitalist to invest money on schemes in which he cannot make big and immediate gains. If small industries have to thrive and the poor unemployed educated man should take to them Government must act generously somewhat in the manner of Mysore. We hope that will ere long happen.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 7 | ஜூலை, 1944 | No. 4 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

## தலையங்கம்.

### மாகாண சாலை போடும் திட்டம்.

யுத்தத்திற்கு பின் ஏற்படவேண்டிய நிர்மாணவேலை திட்டங்களில் சென்னை கவர்மெண்டார் சாலைகள் போடுவதைக்குறித்தும் சில திட்டங்கள் தயார் செய்திருக்கின்றனர். 18 ஆயிரம் மைல் புதிய சாலைகள் போடுவதாக உத்தேசித்திருக்கின்றனர். இதற்காக செலவு செய்யப்போகும் ரூபாய் 10 கோடி இதில் 5 கோடி வாராவதிகளுக்கும் 5 கோடி ரஸ்தாக்களுக்கும் செலவாகும். தற்போது 36,000 மைல் ரஸ்தாக்கள் இருக்கின்றன. இவைகளை சீர்படுத்த கவர்மெண்டு செலவு செய்யப்போகும் தொகை 20 கோடி ரூபாய். இவை 20 வருஷங்களில் செய்து முடிக்கப்படும். மாகாண கவர்மெண்டின் திட்டமானது அகில இந்திய திட்டத்தின் ஒரு அம்சமே யாகும். ஆதலால் தான் மத்திய கவர்மெண்டு விசாலமான திட்டத்தை வகுத்திருக்கிறது. 1000க்கு மேல் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு விவசாய கிராமமும், பெரிய ரஸ்தாவிலிருந்து 2 மைலுக்குமேல் தூரமுள்ளதாக இருக்கக்கூடாது என்று திட்டம் செய்திருக்கிறார்கள். இதர கிராமங்கள் 6 மைல் தூரத்துக்கு அதிகப்படியாக இருக்காது.

நம்வரையில் கிராமத்தையும், கிராம விவசாயின் சௌகரியத்தை குறித்துமே நாம் இதை கவனிப்போம். காடு இருக்கும் பிரதேசங்களைத் தவிர அநேகமாக மற்றெல்லா பிரதேசங்களும் நம்தேசத்தில் விவசாயம் செய்யப்படும் பிரதேசமே. ஏழை விவசாயிதான் அதிக கஷ்டப்படுகிறான்.

ஏனெனில் அவனுக்கு நல்ல வண்டிகளையும், நல்ல மாடுகளையும், ரப்பர் சக்கரங்களும் வாங்க சக்தியில்லை. அவன் முன்னேற வேண்டுமானால் அவனுக்கு, பணம் படைத்த விவாசாயி செலவுகளை கொடுத்து உதவி செய்ய வேண்டும். ஆகையால் இது விஷயத்தில் நல்ல விவசாய பிரதேசமென்றும், மட்டமான விவசாய பிரதேசமென்றும் வித்தியாசம் பாராட்டக் கூடாது. மட்ட விவசாய பிரதேசங்களும் செழுப்படைய முயல வேண்டும். எப்படி யிருந்தபோதிலும் அவைகளுக்கும் போக்கு வரத்து ரஸ்தாக்கள் அவசியம். பெரிய ரஸ்தாவிலிருந்து 2 மைல் தூரம், 6 மைல் தூரம் என்று அளவு விதிப்பதின் அர்த்தம் விளங்கவில்லை. 1,000த்துக்கு மேல்பட்ட ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் எல்லா காலங்களிலும் உபயோகிக்கக்கூடிய ரஸ்தாவுடன் பிணைப்பு தேவை. மழை காலங்களில்-தான் குடியானவனுக்கு நல்ல ரஸ்தா உதவும். மழையில்லாத காலத்தில் நம் ஊர்களில் ஜனங்கள் பாதைகளை உபயோகிப்பதில் கஷ்டமில்லை. உல்லாச யாத்திரைகளுக்காக நல்ல ரஸ்தாக்களை விரும்புவர்கள் நம் விவசாயிகள் அல்ல. அவனுக்கு தன்னையும் தன் விளைபொருள்களையும் வெளியுலகத்துடன் இணைத்து தொடர்பு ஏற்படுத்த தகுந்த ரஸ்தாவே வேண்டியது. நோய்கள் பரவியிருக்கும் காலங்களில் மழை காலங்களில் வைத்திய வசதிகள் கொண்டுபோக சரியான சாலைகள் இல்லாத காரணத்தினால் அநேக கிராமங்களை கவனிக்க முடியாமல் போகவேண்டி வந்தது அனுபவத்தில் தெரிந்த விஷயம்.

இது விஷயமாய் சரியான வழி என்னவென்றால் ஒவ்வொரு கிராமத்தினிடமே பெரிய ரஸ்தாவுடன் இணைக்கும்படி சிறிய ரஸ்தாக்களை போடும் வேலையை விட்டுவிடவேண்டும். நம் மாகாணத்தில் 70,000 கிராமங்கள் இருக்கின்றன. 5 கோடி ரூபாய் அவைகளுள் பங்கிட்டால் தலா சராசரி 700 ரூபாய்தான் கிடைக்கும். உள்ளூர் கூலியாட்களை இரட்டி ஏற்பாடு செய்தால் இதை 1 000 ரூபாய் ஆக்கலாம். இத்திட்டத்தை சரிவர நடத்தக் கூடியது கிராம பஞ்சாயதுகளே. மைசூர் சமஸ்தானம் அதன் பஞ்சாயத்துகளும் இதற்கு ஒரு உதாரணம். இந்த ரஸ்தாபோடும் ஒரு திட்டத்திற்காகவே எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகளை ஸ்தாபித்து, ஒரு சரியான திட்டம் வகுத்து கவர்மெண்டு உதவிகொண்டு தங்கள் கிராமங்களை வெளியுலகத்துடன் பிணைக்க ரஸ்தாக்கள் போடும்படி செய்யவேண்டும்.

நம் நிலமை என்ன வென்றால் எல்லா திட்டங்களும் மத்திய அரசாங்கத்தினால் வகுக்கப்பட்டு, அடியிலிருக்கும் கிராமங்கள் கையில் அதிகாரமோ பொறுப்போ கொடுக்கப்படாமல் போகிறது. கிராமங்களில் ரஸ்தா போடுவதை ஜில்லா போர்டுகள் கையில் ஒப்படைத்தாலும் பிரயோஜனப்படாது.

இப்போது இருக்கும் சாலைகளை சீர்படுத்த 25 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதைப் பற்றி சந்தோஷம் அடைகிறோம். இந்த வேலையை மத்திய சர்காரும் மாகாண சர்காரும் நடத்தலாம் புதிய சாலைகள் போட ஒதுக்கப்பட்டிருக்கும் 10 கோடி ரூபாயை உள்ளூர் கூலியாட்களை இரட்டி வேலை செய்யும் பஞ்சாயத்து கூட்டுகளிடம் ஒப்படைத்து நடத்த வேண்டும். மேல் அதிகாரிகளின் உதவி, மேற்பார்வை உபதேசம் எப்போதும் அவைகளுக்கு கிடைக்கும்.

## துங்கபத்ரா திட்டம்.

துங்கபத்ரா நதியின் தண்ணீரை உபயோகிக்கும் உரிமையைப் பற்றி தீர்மானமான ஒப்பந்தம், மைசூர், ஹைதராபாத் சமஸ்தானங்களுடன் ஏற்பட்டுவிட்டது. ஹைதராபாத் கவர்மெண்டார் ஒத்துழைப்புடன் கூடிய சீக்கிரம் மல்லாபுரத்தில் ஒரு அணைக்கட்டும் ஏரியும் கட்ட சென்னை கவர்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

தற்போதிருக்கும் விலை வாசிகளின்படி இத்திட்டத்தின் செலவு 10 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அது கட்டி முடிய சுமார் 8 வருஷங்கள் ஆகும். ஆனாலும் ஆறு வருஷத்தில் நீர்பாசனத்திற்கு தண்ணீர் கிடைப்பது சாத்யமாகும். இத்திட்டத்தின் படி பெல்லாரி, கர்நூல் ஜில்லாக்களில் சுமார் 4 லக்ஷம் ஏகராக்களுக்கு நீர் பாய்ச்சப்படும். அவைகளில் 10 சத விகிதமே நெல் பயிர் செய்யப்படும். மற்றவைகளில் தினைகள், பருத்தி, கடலைக்காய், தோட்டப்பயிர்கள், இவை பயிர் செய்யப்படும்.

அணைகட்டப்படும் ஸ்தலத்தில் சென்னை ஹைதராபாத் சர்க்கார்கள் மின்சாரவிசை உற்பத்தி செய்வார்கள். சென்னை சர்க்கார் உற்பத்தி செய்யும் மின்சாரம் சீடட் ஜில்லாக்களிலுள்ள இடங்களில் தொழிற் சாலைகள் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்படும்.

அணைகட்டு, ஏரி, இவை கட்டும் செலவை சென்னை, ஹைதராபாத் கவர்மெண்டார் சமமாக பங்கிட்டுக் கொள்ளுவார்கள். இரு சர்க்காரின் பொது மராமத்து இலாகாக்களால் கூட்டாக வேலை செய்யப்படும்.

இந்த ஏற்பாடானது இந்த திட்டத்தைப் பற்றி சென்ற 42 வருஷங் களாக பிரஸ்தாபிக்கப் பட்டு வந்த நிலைமையைவிட அபிவிருத்தி யடைந்து விட்டது. இதற்கு நாம் ஸ்ரீ. S. V. ராமமூர்த்தி அவர்களுக்கு கடமை பட்டவர்களாக இருக்கிறோம். மேலும் இன்னும் சில விஷயங்கள் எதிர்பார்க்கப் படுவதாக பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. அடுத்த வருஷம் வேலை துவக்கப்படப் போவதாக சொல்லப்படுகிறது. அத னிடையில் பூர்வாங்க வேலைகளை செய்து முடிக்க சிப்பந்திகள் நியமிக்கப் படுவார்கள். இந்தப்படி நடக்குமானால் அவை வரவேற்க கூடியதே. ஆனால் சண்டை முடியும் வரையில், இதை துவக்க முடியாது என்று கவர் மெண்டார் தெரிவித்திருக்கின்றனர். அப்படி ஏதாவது வேலை துவக்கப் பட்டாலும், அது பஞ்சம் ஏற்படுமானால் அதை நிவர்த்திக்க பூமியை தோண்டும் வேலை மாத்திரம்தான் செய்யப்படும். யுத்தம் முடியும் வரையி லாவது, பஞ்ச நிலமை ஏற்படும் வரையிலாவது காத்திருக்கவேண்டாம் என்பது எங்கள் விருப்பம். எதை உடனே செய்யமுடியுமோ, அதை உடனே துவக்கவேண்டும். 40 வருஷங்களுக்கு மேலாக பொறுமை யுடனும் பட்டினியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு அப்போதுதான் தைர்யம் பிறக்கும்.

---

## மைசூரும், சில்லரை தொழில்களும்.

மைசூர் எல்லாத்துறைகளிலும் முன்னேறி வருகிறது. கல்வி கற்றவர் களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க ஒரு நூதன திட்டம் வகுக்கப்பட்டு, அதற்காக தொழில், வியாபார இலாகா டைரக்டர்கள்

கடன் துகைகள் வழங்க அதிகாரம் கவர்மெண்டாரால் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின்படி மைசூரில் பிறந்தவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும், தொழில் சாமான்கள் வாங்கவும், ஸ்தாபிக்கவும் டைரக்டர் கடன்கொடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார். தொழில் ஆரம்பித்து முதல் நாட்களில் நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடு செய்யவும் கடன் கொடுக்கப்படும். சில பிரத்யேக சமயங்களில் மூலதன நஷ்டத்திற்கும் ஈடு செய்ய கடன் கொடுக்கப்படும். சாதாரணமாய் 1,000 மும், கண்டிப்பாய் 2,000 க்கு மேல் கடன் கொடுக்கப்பட மாட்டாது. இதில் பாதி உபகார தொகையாகவும், இன்னும் பாதி வட்டியன்னியில் 5 வருஷங்களில், சமமாக மாதத்தவணையாக திருப்பிகொடுக்கவேண்டிய கடன் துகை.

இம்மாதிரி திட்டத்தை சென்னை சர்க்கார் நம் மாகாணத்திலும், முக்கியமாக அடிக்கடி பஞ்சத்தினால் அடிபடும் ராயலசீமா ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டுவருவது நலம். அப்பிரதேசங்களில் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் ஜனங்களே மூலதனம் போடவேண்டும் என்றும், கவர்மெண்டார் உபதேசமும், செய்து காண்பித்தலுமே செய்வார்கள் என்று பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள். முதலாளிகளை உடனே பலன் கொடுக்காத தொழில்களில் மூலதனத்தை போடும்படி தூண்டுவது சாத்திய மில்லை. சின்ன தொழில்கள் விருத்தியடைந்து கல்வியடைந்த வேலையில்லாதவர்கள் அவைகளில் ஈடுபடவேண்டுமானால் நம் சர்க்காரும் மைசூர் சர்க்காரைப்போல் கொஞ்சம் தாராளமாக இருக்கவேண்டும். அப்படி கூடிய சீக்கிரம் நடக்கும் என எதிர்பார்ப்போமாக.

---

# இந்தியாவின் பசியுடனிருக்கும் கால் நடைகள்.

(ஸ்பென்சர் ஹாட்சி என்பவர் எழுதிய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

இந்தியாவின் பசியுள்ள கால் நடைகளுக்கு ஆகாரம் தேவை. தீனி புல் வகைகள்' இந்தியாவின் கால் நடை அபிவிருத்திக்கு மிக்க சகாயம் செய்யும். இப்போது அவைகளில் நான்கு ரகங்களைப்பற்றி நன்றாகத் தெரியும். நேபியர், (Napier), கினி (Guinea) என்னும் புல் தினுசுகள் நன்றாக ஏற்பட்ட உணவுகள். நான் சமீபத்தில் தருவித்த சௌடான் (Soudan) புல் பரிக்ஷித்து பார்க்கப்பட்டு வருகிறது. அதனுடைய ஆழமாக பரவும் வேர்கள் வறண்ட பூமியிலும் கெடாது. அது விதையிலிருந்து மற்ற புல்களைவிட வேகமாக முளைக்கிறது. குயாதமாலா (Guatemala) என்னும் விசாலமான இலைகளையுடைய புல் இலங்கையில் நன்றாக பயிராகிறது. அங்கு மிக்க உபயோகமாகயிருக்கிறது. இதை நாம் நன்றாக பயிர் செய்து ஸ்தாபித்தால் நமக்கு மற்றொரு தீனி புல் தினுசு கிடைக்கும்.

சிறு நிலச் சொந்தக்காரர்கள் இப் புல் வகைகளை அதிகமாக பயிர் செய்யாமல் ஸ்வல்பமாக பயிர் செய்வது நமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. இதற்கு பல காரணங்கள் உண்டு. தண்ணீர் கிடைக்காமை, வேலியில்லாமை, வெகு நாளாக நம்மிடம் இருந்துவரும் புல் விதை போட்டு புல் பயிர் செய்யாமல் எதேர்ச்சையாக வளரும் புல்லை உபயோகிப்பது, மற்றபடி துணைச்சலில்லாமை—இவைபோ

காரணங்களென்னலாம். இதை பயிர் செய்பவர்களும் பயிர் செய்வதிலும், வெட்டுவதிலும் சரியான முறையை அனுசரிப்பதில்லை. புல்லினுடைய முக்கியத்துவத்தை சிலர் அறிந்து வருகிறார்கள். ஒரு கிராம உபாத்தியாயர் இது விஷயமாக அதிக முயற்சி எடுத்துக் கொண்டதின் பயனாக அவருக்கு தாராளமாக பயிர் கிடைத்து, மற்றவர்களுக்கும் விற்பனை செய்வது சாத்தியமாகயிருக்கிறது.

இலங்கையில் இருக்கும் மிகவும் சுறு சுறுப்பான பாதிரி லிகாக் (Father Legoc) என்பவர் அனுசரிக்கும் முறையை விளக்குகிறேன். இம் முறையை புல் பயிர் செய்யும் எல்லா கிராமத்தார்களுக்கும் நாம் சிபார்சு செய்கிறோம்.

புல் பயிர் செய்யும் பூமியை 31 பாகமாக பிரிக்கவேண்டும். மாதம் முதல் நாள், முதல் பாகத்தில் வளர்ந்திருக்கும் புல் வெட்டி உபயோகிக்கப்படுகிறது. கடைசி நாள், கடைசி பாகத்திலிருக்கும் புல் வெட்டப்படுகிறது. அடுத்த மாதம் முதல் நாள், முதல் பாகம் மறுபடியும் வெட்டுவதற்கு தயாராகயிருக்கிறது. வெவ்வேறு ஸ்தலங்களில் புல் பயிர் செய்யப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு பாகமாக பிரித்து இத் திட்டத்தை அனுசரிக்கலாம். நீர் பாய்ச்சுவது சாத்யமானால் ஸ்தலத்தின் மேலான பாகத்தில் ஒரு வாய்க்கால் வெட்டி எல்லா பாகங்களுக்கும் தண்ணீர் பாயும்படி செய்யலாம். லிகாக் என்பவர் தன் மாட்டுக் கொட்டகைக்கு கோடியில் ஒரு தண்ணீர் தொட்டி கல்லினால் கட்டியிருக்கிறார். அந்த தொட்டியில் மாட்டு மூத்திரமும், எருவும் கலக்கப்பட்டு, இந்த சத்துள்ள நீர் புல் மேல் பாகத்திற்கு பாய்ச்சப்படுகிறது.

இந்தியாவுக்கு நல்ல ஆகாரம்தான் ஏற்றது. புல் பயிர் செய்யப்படும் பூமியையே நம்பியிருக்க முடியாது.

# வீட்டு ஈயும் அதை போக்க வழியும்.

ஈக்கள் நாமெல்லோரும் அறிந்ததே. அவைகளை வீடுகளிலும், தெருக்களிலும், கடைகளிலும் இன்னும் மற்ற எல்லா இடங்களிலும் காண்கிறோம். வசந்த காலத்திலும், மழை துவக்கியவுடனும் அவை மிக்க சுறுசுறுப்பாக இருக்கின்றன. அவை சாம்பல் நிறமானவை. மற்ற பூச்சிகள் போல் அல்லாமல் அவைகளுக்கு இரண்டு இரக்கைகளே உண்டு.

ஈக்கள் தாங்கள் உண்ணும் ஆகாரத்தின் கொஞ்சம் பாகத்தை கக்கிவிடுகின்றன. அவைகள் உட்கார்ந்து போன கண்ணாடிகளில் இந்த துப்பப்பட்ட ஆகாரம் சென்படும். திரவ பதார்த்த ஆகாரத்தை உறிஞ்சிக்கொள்ள ஏற்றதாய் அவைகளின் வாய் அமைந்திருக்கிறது. கெட்டியான பதார்த்தங்கள் துப்பப்பட்ட இந்த எச்சிலில் கரைந்து உட்கொள்ளப்படுகிறது. வீட்டு ஈக்கள் எல்லாவித பதார்த்தங்கள்மீதும் உட்காரும். இப்போது ஆகாரத்தின்மீது இருக்கும் ஈயானது அடுத்த க்ஷணமே ஆபாசமான இடத்தில் உட்காரும். தாங்கள் உட்காரும் இடங்களிலுள்ள கண்ட பொருள்களை அவை உட்கொள்ளும். அவைகளின் தேகத்திலுள்ள மயிர்களில் அழுக்குகள் ஒட்டிக்கொள்ளுகின்றன. சகல விதமான கிருமிகளும் அவைகளுள் சென்று விருத்தியாகின்றன. இவைகளில் அநேகம் அவைகளின் மலத்தின் வழியாக அவை உட்காரும் இடங்களில் வெளியாகின்றன. இன்னும் அநேகம் அவை கக்கும்போது வெளி வருகின்றன. இவ்விதம் ஈக்களின் தேகங்களிலிருந்து அநேக கொடுமையான கிருமிகளை தனித்து எடுக்க முடிகிறது. அவைகளில் அநேகம், பல கொடிய நோய்களான வாந்திபேதி, டைபாய்டு, விஷஜுரம், பேதி, சீதபேதி, பிளேக், க்ஷயம் இன்னும் பல நோய்களுக்கு காரணமாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அவை நம்மை சுற்றி பறந்து நம் தேகங்களில் உட்கார்ந்து ஹிம்சித்து தொல்லை செய்கின்றன. ஆகையால் அவை நமக்கு தொல்லை செய்வதுடன் வியாதிகளுக்கும் காரணங்களாக இருக்கின்றன.

சிறிய ஈக்களின் ஆகாரமான சுலபமாக மூழிங்கி ஜீரணம் செய்யப்படும் ஆகாரம் எங்கு கிடைக்குமோ அவ்விடங்களிலேதான் ஈக்கள் அதிகமாக வாசம்செய் கின்றன. தொட்டில்களிலுள்ள எருக்களிலும், வீட்டு குப்பைகளிலும், பழைய கிழிசல்களிலும், காகிதம், அழுகிப்போன காய்கறிகள், எல்லா பழங்களிலும் இவை முட்டை யிடுகின்றன. சுமாராக ஈரமாயும், கொஞ்சம் உஷ்ணமாயும் இருந்து புளித்துப்போகக் கூடிய வஸ்துக்களில் அது விருத்தியடைகிறது. அது மிக்க அதிகமாக விருத்தியாகின்றது. ஒரு ஈக் ஜோடியானது எல்லாம் உயிருட னிருந்தால் 191,010,000,000,000,000,000 ஈக்கள் உற்பத்தி செய்யும்.

ஈக்கு உஷ்ணமான சூரிய வெளிச்சம் மிக்க பிரியம். நடுப்பகல் வெயிலின் போது அது நிழலைத் தேடுகிறது. சூரியாஸ்தமனமாகி உஷ்ணம் குறைந்தவுடன் அது சுறுசுறுப்பற்று, உஷ்ணமான பந்தோபஸ்தான இடத்தை தேடிக்கொண்டு போகிறது. இருட்டு வேளைகளில் அது செங்குத்தாக தொங்கும் கயிறு, கம்பி, சட்டம், கொம்பு இவைகளில் தங்கும். அது அடிக்கடி சுத்தமான இடத்தில் உட் கார்ந்து, தன் தேகத்தை கால்களால் தேய்த்துக்கொள்ளும். அவை விருத்தியடை வதை தடுக்க, அவை வராமலும், அதிக விருத்தியடைவதை தடுத்தும், பெரிய ஈக்களை கொன்றும் தடுக்கலாம். அவைகளை தடுக்க சுத்தம் முதல் முக்கியம் எல்லா சாமான்களையும் மூடி வைக்கவேண்டும். மேஜைகளும், வீடுகளும் சுத்தமாக வும் உணர்ந்தும் இருக்கவேண்டும். கம்பி சட்டங்களும், மூங்கில் தடுக்குகளும் போட்டு ஜன்னல்களை மூடினால் இவை அதிகம் வராது.

இந்தத் தொல்லை நம் பண்ணைகளில் அதிகம் ஏற்படுகிறது. ஏனெனில் விவசாயி பண்ணையிலிருந்து கிடைக்கும் குப்பைகளை எருவுக்காக உபயோகிக்க வேண்டி யிருக்கிறது. அந்த குப்பை கொஞ்சமாக இருந்தால் அதை ஒரு அங்குல கனத்திற் பறப்பி வெயிலில் உலர்த்தவேண்டும். உலர்ந்த பொடி சுண்ணாம்பை இதன்மேல் தூவினால் ஈக்கள் வருவதில்லை. சாணியை தினமும் கிளறி வெயில் படும்படி செய்யவேண்டும். எறும்புகளும், வெட்டுக்கிளிகளும், இன்னும் சில பூச்சிகளும் சிறு ஈக்களை பொறுக்கி அவைகளை புசிக்கின்றன. வெயிலின் உஷ்ணம் பெரிய ஈக்களை சாகடிக்கின்றது. நான்கு நாட்கள் கழித்து இந்தக் குப்பையை எருவு தொட்டிக்குள் போடலாம். குப்பை அதிகமாக இருந்தால், அதை ஆழமான பள்ளங்களில் குவித்து வைக்கவேண்டும். பள்ளங்களில் சேகரித்து வைக்கப்படும் சாணிகளின்மேல் ஒரு பெரிய கோணிப் பையை போட்டு மூடவேண்டும். உஷ்ணம் தங்கி இருப்பதற்காக கோணியில் தாரை நன்றாக பூசவேண்டும். பக்கங் களிலிருந்து சிறிய ஈக்கள் வெளியே வாராதபடி ஓரங்களை பள்ளங்களில் பக்கங் களில் சேர்த்து மூடவேண்டும். அவ்விடங்களில் கொஞ்சம் மண் பூசினால் அது அசையாமல் இருக்க உதவும்.

**பெரிய ஈக்களை கொல்லுதல்.**

புகைகள்:—மூடின இடங்களில் வேப்ப இலை புகை ஈக்களை கொல்லும். காய்ச்சப்படும் பாத்திரத்தில் 20 துளி கார்பாலிக் ஆசிட் ஊற்றினால், அப்புகையி னருகில் வரும் ஈக்கள் சாகடிக்கப்படுகின்றன.

ஈ காகிதம்:—எட்டு பாகம் எடையுள்ள பொடி செய்யப்பட்ட ரோஜனத் துடன் ஐந்து பாகம் எடையுள்ள ஆமணக்கெண்ணெயை மிதமான தீயில் காய்ச்சி, அவை நன்றாக கலக்கும் வரையில் கிளறவேண்டும். பிறகு சூடாக அதை காகிதத் தின்மேலும், கயிறு, நேரான கம்பிகள், தந்திகள் இவைமேல் பூசவேண்டும்.

இதைத் தவிர, இயற்கை முறைகளும் சில உள்ளன. சில பூண்டுகள், சிலந்தி பூச்சி, பல்லிகள், சில பறவைகள் ஈக்களை கொல்லுகின்றன.

அந்தந்த பிரதேசத்து ஜனங்களின் உத்சாகத்துடன் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு இல்லாமல் இம்முறைகளெல்லாம் பலன் தராது. இது இருந்தால் ஈக்களின் தொல்லையை குறைத்து, கொடிய வியாதிகளால் வருஷா வருஷம் இறக்கும் ஜனங்களின் உயிர்களை காப்பாற்றலாம்.

---

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

**நீர் பாசன கிணறுகள் வெட்ட கவர்மெண்டு சகாயம்.**

மதுரை, வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், திருநெல்வேலி, ராமநாதபுரம், இந்த ஜில்லாக்களில் அந்தந்த ஜில்லாவில் வெட்டப்படும் கிணறுகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் கிணறுகள் வெட்ட குடிகளுக்கு சகாயம் செய்வதற்காக செலவுக்காக ரூபாய் 15,625 வரையில் கொடுக்க இந்தியா கவர்மெண்டும் சென்னை கவர்மெண்டும் தீர்மானித்திருப்பதாக ரெவினியூ இலாகாவால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை கூறுகிறது. இந்த தொகையில் சென்னை கவர்மெண்டு கொடுப்பது ரூ. 9,375. திரவிய சகாயம் இல்லாமலும் கடன் கொடுத்து சகாயம் இல்லாமலும் கிணறுகள் வெட்ட சக்தியற்றிருக்கும் குடிகளுக்கு ரெவினியூ டிவிஷனல் உத்தியோகஸ்தர்களால் தொகை அனுமதிக்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் அதிகப்படியாக கொடுக்கப்படும் தொகை ரூ. 310. இத்திட்டப்படி சுமார் 127 கிணறுகள் வெட்டப்படும் என்று கவர்மெண்டார் எதிர் பார்க்கின்றனர்.

*　　　*　　　*

**ராஜோல் தாலூகாவில் நீர் பாசன வசதிகள்.**

கிழக்கு கோதாவரி ஜில்லா, ராஜோல் தாலூகாவிலுள்ள கோமராஜிலங்கா, ஆத்ரேயபுரம் கிராமங்களில் சில மேட்டு நிலங்களுக்கு நீர் பாசன வசதிகள் அளிக்க சுமார் ரூ. 2,67,650 ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை அமுல் நடத்த அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தை அனுசரித்து கவர்மெண்டார் அனுமதித்திருக்கிறார்கள்.

*　　　*　　　*

**அதிக ஆகார உற்பத்தி.**

இந்த இயக்கத்தின்படி பெல்லாரி தாலூகாவிலுள்ள மல்லப்பனசேரியின் உடைப்பை 40,000 ரூபாய் செலவில் உடனே சீர்படுத்த திட்டத்தை அனுமதித்திருக்கிறார்கள்.

*　　　*　　　*

**நீந்சல் மடுவுவில் அணைகட்டு.**

செங்கல்பட்டு ஜில்லா, பொன்விளைந்த கலத்தூர் கிராமத்து வரிக்கு தண்ணீர் வாய்கால் கட்டவும், நீஞ்சல் மடுவுவில் ஒரு அணைகட்டு கட்டவும் ரூ 4,89,400 ரூபாய் செலவில் தயார் செய்யப்பட்ட திட்டத்தை உடனே அமுல் நடத்த கவர்மெண்டார் அனுமதித்திருக்கிறார்கள்.

*　　　*　　　*

**காவேரி மேட்டூர் திட்டம்.**

காவேரி மேட்டூர் திட்டத்தின் கீழ் அதிகப்படியாக நீர்பாசன வசதிகள் அளிக்கப்பட்ட பிரதேசங்களின் விபரத்தைப்பற்றி சென்னை கவர்னரின் யோசனையாளரான, கனம் S. V. ராமமூர்த்தி அவர்கள் தெரிவித்தார். மொத்தம் நீர்பாசன வசதியற்ற ஒதுக்கப்பட்ட ஒரு லக்ஷ ஏகராக்களில், 40,000 ஏகராக்களுக்கு வசதிகள் அளிக்க சென்ற வருஷம் கவர்மெண்டார் பிரத்தியேக ரெவினியூ இஞ்சினியரிங்கு சிப்பந்திகளை அமர்த்த அனுமதித்தார்கள். இச்சிப்பந்திகளின் உதவியால், மேட்டு நிலங்கள் பள்ளமாக்கப்பட்டு, வாய்கால்கள் வெட்டப்பட்டு, நில பாத்தியதை தகராறுகள் தீர்க்கப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு கூலியாட்கள் கிடைக்கவும் திரவிய சகாயம் அடையவும் உதவி செய்யப்பட்டது. இதன் பயனாக அடுத்த அக்டோபர் மாதம் சாகுபடி ஆரம்பிக்க போகும்போது இப்போது லக்ஷியமான 40,000 ஏகராக்களுக்கு நீர்பாசன வசதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*　　　*　　　*

அடுத்த வருஷமும் இன்னும் 40,000 ஏகராக்களுக்கு இவ்வுதவி கிடைக்கும். ஆகியில் இத்திட்டத்தின்படி எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தம 3 லக்ஷ ஏகராக்களில் 25,000 ஏகராக்கள் பிரயோஜனமற்றது என்பது தெரிகிறது. ஆகையால்

இதர இடங்களிலுள்ள இன்னும் 30,000 ஏகராக்களை பொறுக்கியெடுத்து அவைகளுக்கு நீர்பாசன வசதிகள் அளிக்க திட்டம் தயார் செய்யும் படி கவர்மெண்டார் பிரதம இஞ்சினியரை கேட்டிருக்கிறார்கள்.

* * *

இதன்படி இந்த இரண்டு வருஷங்களில் காவேரி மேட்டூர் திட்டத்தின் கீழ் இருக்கும் அயகட்டுகளில் பாசன வசதிகள் குறைந்தது லக்ஷம் ஏகராக்களுக்கு மேல் வசதிகள் அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

* * *

விசாகப்பட்டணம் ஏஜென்சியில் உருளைக்கிழங்கு பயிர்.

ஷை ஏஜென்சியிலுள்ள அராகா பள்ளத்தாக்கில் 5,000 ஏகராவில் உருளைக் கிழங்கு பயிர் செய்ய திட்டத்தை கவர்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். அப்பிரதேசத்தில் மலேரியா நோயை தடுத்து மலைஜாதியினரை பயிர் வேலைக்கு தயார் செய்தும், அப்பிரதேசங்களை செழிப்புறச் செய்யப் போவதாக தெரிவிக்கப்பட்டது. ராணுவத்தின் தேவையை பூர்த்தி செய்ய கவர்மெண்டு இலாகா மூலம் 1,250 ஏகராக்களில் உருளைக்கிழங்கும் இதர காய் கறிகளும் பயிர் செய்யப்படும். மலைஜாதியினரை அப்புறப்படுத்தப்பட மாட்டாது. தேவையானால் அவர்களுடைய குடிவார பாத்தியதைக்கு பாதகம் வராமல் அவர்களிடமிருந்து நிலம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மூன்று வருஷம் ஆனவுடன் இலாகா மூலம் பயிர் செய்வது முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிறகு மலைஜாதியினர் அதை மேல் கொண்டு நடத்தலாம். இசா காலி நிலங்களில் தேவையானவர்கள் குடியேற்றப்படுவார்கள். இத்திட்டத்தின்படி, மலேரியாவை தடுக்க வைத்திய வசதி, விவசாய, பொது மராமத்து இலாகா, வைத்திய இலாகா சிப்பந்திகள் இருப்பார்கள். மலைஜனங்களுக்கு, கிணறுகள், போக்குவரத்து சாதனங்கள், வைத்திய வசதிகள் முதலிய சௌகர்யங்கள், செய்து கொடுக்கப்படும். இத்திட்டத்தை விசாகப்பட்டணம் ஏஜென்ஸி அனுபவம் வாய்ந்த ஒரு டிபுடி கலெக்டருடைய சகாயத்துடன் ஏஜண்டு மேல் பார்வை செய்வார். இதர இடங்களை சேர்படுத்துவது இத்திட்டத்தின் வெற்றியை பொறுத்திருக்கிறது.

* * *

தாலூகா கல்வி ஆலோசனை கமிடிகள கலைக்கப்பட்டன.

ஆரம்ப கல்வி சம்பந்தமாக 1938இல் ஏற்படுத்தப்பட்ட ஷை கமிடிகளை, அவைகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அக்காரியங்கள் நிறைவேறவில்லை என்று அபிப்பிராயப்பட்டு கவர்மெண்டார் கலைக்க உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

* * *

பம்பாயில் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஏற்படுத்த பம்பாய் கலா சங்கம் ஒரு வருஷத்திற்கு கொச்சின் சமஸ்தான பிரதம ராணியின் வைத்தியரான ஸ்ரீ T. அச்சுத்வாரியரை ஆயுர்வேத டைரக்டராக நியமித்திருக்கிறது.

* * *

தெற்கு ராணுவ பிரதேசங்களில் அதிக மரங்கள் பயிர் செய்யும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவை கண்டோன்மெண்டுகளிலும், தற்காலிக ராணுவ முகாம்களிலும் பயிர் செய்யப்படும். ராணுவத்தால் சிறு செடிகள் கொடுக்கப்படும் ராணுவத்தவர்கள் அவைகளை வளர்ப்பார்கள். காட்டு கான்சர்வேடர் முறைகளை கற்றுக்கொடுத்து, விதைகளை இனமாக கொடுப்பார். மைசூர் கவர்மெண்டாரும் ஒரு உத்தியோகஸ்தரை இதற்கு கொடுத்திருக்கிறார்கள்.

* * *

கோரக்பூர் ஜில்லாவில் காம்பீர்கஞ்சு என்ற இடத்தில் ஒரு காகித உற்பத்தி சாலை ஏற்படுத்தப்படப் போகிறது. அதன் இயந்திர சாமான் ... ரி லேயே தயார் செய்யப்பட்டவை. அச்சாலை 250 முதல் 500 ... யார் செய்யும்.

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிஸிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.